# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : STC.232/2024 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : PW-1 | Village: | அணைக்கரை |
| Name | : ரவிக்குமார் | | |
| | | Taluk | : திருவிடைமருதூர் |
| Father's/Husband's Name | : வரதராஜன் | Age | : 52 |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 16.10.2025.**

**<u>சத்திய பிரமாண வாக்குமூலம்</u>**

நான் இத்தனி நபர் புகாரின் புகார்தாரர் ஆவேன். எதிரி ராமு என்பவருக்கு எதிராக காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள இவ்வழக்கு விபர சங்கதிகள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 11.03.2024 ம் தேதியிட்ட பாரத் ஸ்டேட் வங்கி திருப்பனந்தாள் கிளை காசோல எண்.642190 அசல் பு.சா.ஆ.1 ஆகவும், 20.03.2024 ம் தேதியிட்ட சிட்டி யூனியன் வாங்கியால் வழங்கப்பட்ட குறிப்பாணை அசல் பு.சா.ஆ.2 ஆகவும், 01.04.2024 தேதியிட்ட எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் பு.சா.ஆ.3 ஆகவும், மேற்படி அறிவிப்பை எதிரி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் பு.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. எனவே என்னிடம் கடன் பெற்று தனது வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்பதை தெரிந்து எனக்கு காசோலை அளித்து ஏமாற்றிய எதிரியின் மீது மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழ்

இத்தனி நபர் புகாரை தாக்கல் செய்துள்ளேன். எதிரியின் மீது மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் கீழ் தண்டித்து, காசோலை தொகையை இழப்பீடாக பெற்று தருவதற்கு எனது வழக்கை கோப்பிற்கு எடுக்க போதிய முகாந்திரம் உள்ளதால் எனது தரப்பு சத்திய பிரமாண வாக்குமூலத்தையும் ஆவணத்தையும் ஏற்று வழக்கை கோப்பிற்கு எடுத்து எதிரியின் மீது மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் கீழ் தண்டித்து, காசோலை தொகையை இழப்பீடாக வழங்க வேண்டி பிராத்திக்கிறேன்.

என் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeshwari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.(FAC)**